உ

குகமயம்




யாழ். உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும்,
வட்டக்கச்சி, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் திரு

# குருநாதி பூரணச்சந்திரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்


**04 . 07 . 2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்,
அன்புக்கோர் அகல் விளக்காய்,
உற்றார், உறவினர், ஊருக்கோர் பெருவிருட்சமாய்,
நல்வழிகாட்டும் ஒளிச்சுடராய், பாசத்தின் இருப்பிடமாய்,
கடமைக்கோர் முன் உதாரணமாய் - எம்மையெல்லாம்
வழிநடத்தி வாழ்வித்த - எங்கள் பாசமிகு
அன்புத் தெய்வம் ஐயா - நீங்கள்
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
ஆண்டவன் தோட்டத்து மலராகி விட்டீர்கள் - ஐயா!
இயற்கைதான் எம்மிடமிருந்து உங்களைப் பிரித்துவிட்டது.
தெய்வம் உங்களை அழைத்துவிட்டது, என்ன செய்வோம்?
வாழும் வகைகாட்டி வாழ்வித்தீர்கள் - ஐயா
உங்கள் இன்முகத்தின் காட்சியையும், நினைவுகளையும்
எம்மிடமிருந்து பிரிக்க முடியாது - ஐயா
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வமாகிவிட்டு
கற்பக விநாயகர் திருவடியை சென்றடைந்த
உங்கள் நினைவாக எங்கள் - மனங்களில்
மறைந்தும் மறையாது வாழும்
தந்தைக் கோவிலின் பாத கமலங்களுக்கு
இம் மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை மடியில்
22.01.1938

ஆண்டவன் அடியில்
04.06.2015

அமரர் திரு

# குருநாதி பூரணச்சந்திரன்

## திதி வெண்பா

*சீரோங்கு அபரபட்ச தேய்பிறை திருதியைதிதி தன்னில்*
*தேரோங்கு மன்மதஆண்டு வைகாசிஇருபத்தொன்றில்- பார்நீங்கி*
*பேரோங்கு குருநாதி பூரணச்சந்திரன் பிறவிப்பணியறுத்து*
*மேலோங்கு பதமடைந்த நாள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு குருநாதி பூரணச்சந்திரன் அவர்களின் வாழ்க்கை வளம்

சீர்பல பெற்ற சிறப்புமிகு இலங்கையின் வடக்கே கவிபாடி யாழ்பெற்ற யாழ்ப்பாணத்தின் கண்ணே சிரமென விளங்கி பல வளமும் பெற்று பண்புறு பெரியோர் பலரும் பண்ணிசைக்கும் பாங்கான ஊர் உரும்பிராய். மலைபோன்று உயர்ந்து காட்சிதரும் இராஜ கோபுரமும் கொண்ட ஓடையம்பதி கற்பக விநாயகர் முன் வானளாவ வளர்ந்த மருதமர வாசலிலே குருநாதி இலட்சுமிப்பிள்ளை தம்பதியினருக்கு இரண்டாம்கால் ஆளவைக்கும் சிரேஷ்ட புதல்வனாக தைத்திங்கள் இருபத்திரண்டாம் திகதி, ஆயிரத்தொளாயிரத்து முப்பத்தெட்டாம் ஆண்டு (22.01.1938) அவனியில் செல்வன் வந்துதித்தார். பூரண சந்திரனைப் போல் காட்சியளித்த தம் மைந்தனுக்கு "பூரணச்சந்திரன்" என நாமகரணம் சூட்டி மகிழ்ந்தனர்.

சின்ன சின்ன செல்லக் குறும்புடன் மழலைப் பருவமது மெல்ல நகர "வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற்கிணங்க ஆரம்பக் கல்வியை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து கல்வி பயின்றார். தமது குலதெய்வமான விநாயகர் ஆலயத்தில் சைவநெறி தவறாது ஆலயப் பணிகளிலும், அனுட்டானங்களிலும் சைவ சமயத்தைப் போற்றி வாழ்ந்தார். பெற்றோரின் ஏழ்மைநிலை காரணமாக செல்வக் குழந்தை இல்லையாயினும், செல்லக் குழந்தையான இவன், தாய் தந்தை இருவரையும் தன் இரு கண்கள் எனக் கொண்டு வாழ்ந்தார். "கொடிது கொடிது இளமையில் வறுமை" ஆயினும் தனது கல்வியில் கரை கடக்க மறுக்காது பள்ளிப் படிப்பை திறம்பட முடித்துக் கொண்டு கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் 1952ல் பயிற்சியாளராக கடமையேற்றார். "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்பதற்கிணங்க கடமையே கண்ணெனக் கொண்டு, சிரமேற் கொண்டு மிகுந்த இடர்களின் மத்தியிலும் ஒழுக்கநெறி தவறாது கடமையில் மேன் மகனாக விளங்கினார். கண்டாவளை உட்பட்ட சில குக்கிராமங்களிலும் பணி புரிந்து எண்ணிலடங்கா மக்களின் மனங்களில் இடம்பிடித்து இறுதியாக 1958ல் வட்டக்கச்சி அரசினர் மருந்தகத்தில் மருந்தாளராக பணியில் அமர்ந்தார். 1960ல் நிரந்தரமாக கடமையில் களமிறங்கினார்.

பாசத்திற்கு பாத்திரமான இனிய உடன் பிறப்புக்கள் காலஞ்சென்ற தவபத்மாதேவி (தமிழ்ஈழம்), காலஞ்சென்ற குணக்கொடி (தமிழ்ஈழம்), மீனாட்சியம்மா (இங்கிலாந்து), காலஞ்சென்ற அருச்சுணராஜா (தமிழ்ஈழம்), காலஞ்சென்ற பவளக்கொடி (தமிழ்ஈழம்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற இந்திரகுமார் (தமிழ்ஈழம்), பாலகிருஷ்ணன் (தமிழ்ஈழம்), இலகவகுமார் (தமிழ்ஈழம்), சந்திராதேவி (சுவிஸ்), பூமாதேவி (தமிழ்ஈழம்), காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரை தன் சொத்தெனக் கொண்டு அவர்கள் தேவைகளைப் பூர்த்திசெய்து மகிழ்ந்தார்.

வசீகரமான கட்டிளம் காளைப் பருவம், பெயரிற்கு ஏற்ப வயதிற்கு விஞ்சிய உயரம், கண்டோரையெல்லாம் காதலிக்க வைக்கும் மிடுக்கான தோற்றம். விழுந்தாள் காதல் வலையில் கமலவதனி. சிவஞானம் காந்தபூபதியின் சிரேஷ்ட புதல்வி கமலவதனியுடன் காதல் வானில் சிறகடித்துப் பறந்தார். காதல் வாழ்க்கை தேனென இனிக்க 1965ல் மங்கல நாண் பூட்டினார். இருமனம் இணைந்து திருமணமானது. அங்கீகாரத்துடன் அகலக்கால் வைத்தனர், உல்லாசமாக உருண்டது திருமண வாழ்க்கை.

வருடம் 1966ல் முத்தாக மூத்தவள் சிவச்சந்திரகலா எனும் பெண் மகவு காதல் வாழ்க்கையையும், கல்யாண வாழ்க்கையையும் அர்த்தப்படுத்த வந்து பிறந்தாள். வருடங்கள் கடந்தன, கடக்கும் வருடங்களில் முறையே குருஞானச்சந்திரன் (குரு - கனடா), கலியுகவரதன் (வரன் - கனடா), ரங்கநாதன் (ரங்கன் - கனடா), சூரியகலா (சூரியா - கனடா), காலஞ்சென்ற நவநீதராஜ் (தமிழ்ஈழம்), லுகிர்தநாதன் (லுகிர் - கனடா), கஜப்பிரகாஷ் (கனடா) என்ற திருநாமங்களிட்டுப் பிள்ளைச் செல்வங்களிற்கு ஈடிணையற்ற தந்தையாக விளங்கினார்.

பிள்ளைகளின் வாழ்க்கைத் துணைகளாகவும், நற்குணமுள்ள மருமக்களாகவும், தியாகேஸ்வரன் (கனடா), மஞ்சுளா (கனடா), மிதிலா (மயூரதி - கனடா), ரஜீவன் (கனடா) ஆகியோரைப் பெற்று மகிழ்ந்தார். மருமக்கள் யாவரையும் மக்களாகவே மதிக்கும் மாண்புள்ள பண்புத் தெய்வமாக விளங்கினார்.

காலஞ்சென்ற யோகராஜா (தமிழ்ஈழம்), காலஞ்சென்ற ஜெயபாலினா (தமிழ்ஈழம்), மகாதேவி (தமிழ்ஈழம்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), காலஞ்சென்ற அன்ரன் மேசி (தமிழ்ஈழம்), கௌரிநாயகி (தமிழ்ஈழம்), சகுந்தலாதேவி (தமிழ்ஈழம்), காலஞ்சென்ற மகேந்திரன் (சுவிஸ்), கந்தசாமி (தமிழ்ஈழம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

காலஞ்சென்ற தாமிரவதனா (தமிழ்ஈழம்), ஸ்ரீ கிருஸ்ணானந்த சிங் (நந்து - கனடா), ஸ்ரீ நித்தியானந்த சிங் (சிவம் - கனடா),


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவயோகவதனா (ராணி - கனடா), ஸ்ரீ விவேகானந்த சிங் (விவேகம் - தமிழ்ஈழம்), ஸ்ரீ விஜயானந்த சிங் (விஜி - கனடா), சாந்தசற்குணவதனா (சாந்தி - இங்கிலாந்து), சிவ ஞானச்சந்திரன் (ஞானம் - கனடா), கமலானந்தன் (ஆனந்தன் - கனடா) ஆகியோரை தாரவழி மைத்துனராக புரிந்துணர்வுடன் பழகும் அன்பு கனிந்த பண்புத் தெய்வமாக விளங்கினார்.

கபிலன், மயூரி, சாரங்கி, யானுஷா, துர்க்கா, விபுஷா, ஜஸ்னன், சாகனா, லஷ்ஸன் என்ற இனிய பேரக்குழந்தைகளுக்கு மடியில் இருத்தி மாண்புறு கதைகள் சொல்லும் அன்புத் தாத்தாவாகத் திகழ்ந்தார்.

இவைநிற்க, தந்தை (30.12.1987), தாய் (10.09.1981) இருவரும் இறைவனடி சேர தாய் தந்தையை இழந்த சோகத்திலும் மனம் சோர்வடையாது அவர்களின் வழிகாட்டலில் தம் சகோதர, சகோதரிகளின் வளர்ச்சியில் முக்கிய பெரும் பங்கெடுத்தார்.

நான்காம் நாள் வியாழ ஆனி அன்று திருதியை தினமதில் கனடாவில் தமது இல்லத்தில் 04.06.2015ம் திகதி அன்பு மனைவி, பாசமுள்ள பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர் கதிகலங்கி கதறி நிற்க, இவர் நீள்துயிலில் நிரந்தரமாக, நிம்மதியாக இறைவன் திருவடியைப் பற்றிக் கொண்டார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

~ ~ ஓம் சாந்தி ~ சாந்தி ~ சாந்தி ~ ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

குருநாதி* + இலட்சுமிப்பிள்ளை*

- தவபத்மாதேவி*
- **பூரணச்சந்திரன்***
- குணக்கொடி*
- மீனாட்சியம்மா
- அருச்சுணராஜா*
- பவளக்கொடி*
- இந்திரகுமார்*
- பாலகிருஷ்ணன்
- இலகவகுமார்
- சந்திராதேவி
- பூமாதேவி
- கிருஷ்ணமூர்த்தி*

- சிவச்சந்திரகலா + தியாகேஸ்வரன்
  - கபிலன்
  - மயூரி
- குருஞானச்சந்திரன்
- கலியுகவரதன் + மஞ்சு
  - சாரங்கி
- ரங்கநாதன் + மிதிலா
  - ஜானுஷா
  - துர்க்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ி உறவுகள்

சிவஞானம்* + காந்தபூமி*

கமலவதனி

*தாமிரவதனா

ஸ்ரீ கிருஷ்ணானந்த சிங்

ஸ்ரீ நித்தியானந்த சிங்

சிவயோகவதனா

ஸ்ரீ விவேகானந்த சிங்

ஸ்ரீ விஜயானந்த சிங்

சாந்த சற்குணவதனா (லண்டன்)

சிவஞானச்சந்திரன்

கமலாநந்தன்

சூரியகலா + ரஜீவன்

விபுஷா

ஜஸ்னன்

நவநீதராஜ்

லுகிர்தநாதன்

கஜப்பிரகாஷ்

* அமரத்துவமடைந்தோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

காதலித்து கரம் பிடித்தீர்கள், வறுமைக்கு விஞ்சிய பாச செழிப்பது
வளமாக செல்வங்கள் எட்டதை சிட்டாகப் பெற்றெடுத்தோம்.
எட்டுத் திசையாக பிள்ளைகள் தூணென தோள் கொடுத்தாலும்
என் உலகம் எதுவென உங்களுக்குத் தெரியாதா?
எது எனக்குத் தெரியும் ....? எதுவுமே தெரியாது ஐயா!
எல்லாவற்றிற்கும் உங்கள் காலடியில் சுருண்டு கிடந்தேன் ஐயா!
என்னகுறை கண்டீர்கள் - என் பணியில்.
நீங்கள் கண்ணசைக்கும் முன் உங்கள் கடன் முடித்து நின்றேனே
ஏன் ஐயா ... ஏன்..? என்னை விட்டுச் சென்றீர்கள்...?

அன்பும் பண்பும் ஒழுக்கமும் அறிவாற்றலும்
சேவை மனப்பான்மையும் கொண்ட அருள் ஒளியே
நாடு விட்டு நாடு வந்தும் உங்கள் கொள்கையிலும்
நேர்மையிலும் மாற்றமேதுமில்லை ஐயா!
சொந்த மண்ணின் அளவுகடந்த பற்றினால்
உழைப்பது அனைத்தையும் ஏழைமக்களுக்கே தந்தீர்கள்.
வெளியுலகம் அறியாப் பாவைநான் - இன்று சிறகொடிந்து நிற்கின்றேன்
துன்பமுடன் நானிருந்துவாட தூயவரே என்னபிழை செய்தேன் ஐயா?

## பிள்ளைகளின் புலம்பல்

"பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதி" - இந்த
நியதிக்கு உட்பட்டதே உலக வாழ்வு எனினும் தற்போது
நாங்கள் வாழ்க்கையில் தனித்தவர்களாக நிற்கின்றோம்.
உங்கள் அன்பான நினைவலைகள் மனதிலே நிழலாடுகின்றன!
"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்பதற்கிணங்க என்றுமே
உங்கள் சொல்லிற்கு மறுவார்த்தை சொன்னதில்லையே - ஐயா
எங்கு சென்றீர்கள் நீங்கள்?
உங்களை எண்ணித் தவிக்கின்றோம் நாங்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## பேரப்பிள்ளைகளின் புலம்பல்

தாத்தா! அப்பப்பா! என நாம் அழைத்திட்டால்
அன்பொழுக ஓடோடி வந்து ஆசையாய் அணைத்திடுவீர்
அன்பு முத்தம் தந்திடுவீர், இன்பமதை பொழிந்திடுவீர்
இனியகதை சொல்லிடுவீர், இனி யாரிடம் இவைபெறுவோம்?

## மருமக்களின் புலம்பல்

பாசம் கொண்டெங்கள் பக்கத்தில் இருந்தீர்கள்
பக்குவத்தை நாமிழக்கப் பாரை விட்டகன்றீர்கள்
நீசக்காலன் உங்களை ஏன் பிரித்தான்?
நிதம் வாடித் துடிக்கின்றோம், உருகுகின்றோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகமயம்



## பிள்ளையார் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றியென்றும்
அலை புனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகமயம்

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவா இன்பஅன்பு வேண்டிப் பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழ்
இருக்க என்றார்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியிலுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம்ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்புஅறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோறி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்துஇருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டிப்
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆர் உயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண் ஆர் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நல் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கிறோம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறவாத இன்பமெய்தி எம்மையெல்லாம் பாசத்துடன் வழிநடத்தி வாழ்வித்த எங்கள் பாச தெய்வம் திரு. குருநாதி பூரணச்சந்திரன் அவர்கள் மறைவுற்ற செய்தி கேட்டு எங்கள் வீடுகளுக்கு வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதி யாத்திரையின்போது கலந்து கொண்டவர்களுக்கும், அகலாது அருகிருந்து கண் துஞ்சாது தம் கடமையென சிரமேற் கொண்டு உதவிய மைத்துனர்மார்க்கும், அன்னாரின் ஆத்மசாந்திக்காக பல வழிகளிலும் எம் துன்பத்தில் உடனிருந்து தகுந்த நேரத்தில் தேவையான உதவிகளை சந்தர்ப்பம் நோக்கி சாலவும் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும், உள்நாட்டிலும், தூரதேசத்திலிருந்தும் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கும், மலர்கள், மலர்மாலைகள், மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், தேவார பாராயணங்கள் வழங்கியோருக்கும், ஆன்ம மோட்ச கிரியைகளை சிறப்புடன் நிறைவேற்றிய அந்தணர்களுக்கும், இந் நினைவுமலர் வெளியிட உதவியாக இருந்த அனைத்து உள்ளங்களுக்கும், எமது இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு இன்று 04.07.2015ல் நடைபெறும் அந்தியேட்டி ஆராதனைகளில் பங்கு கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த இனிய இதயங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நன்றியுடன்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்,
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றெரு நாள், அது வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Quality Printing 416.281.6554